**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No.10/2021** |
| Deposition of witness for | Prosecution **LW - 2 / PW - 6**<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **திரு. ஏழுமலை** |
| Father's Name | : திரு. தாந்தோனி |
| Village | : கீழ்நேத்தப்பாக்கம் |
| Taluk | : செய்யாறு |
| Calling | : விவசாயம் |
| Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd Day of November 2025.

**(எதிரி ஆஜர். )**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

நான் கீழ்நேத்தப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஜீவா என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும், அவரது பெயர் ஜோதி. அ.சா.1 ஜீவா என்னுடைய வீட்டில் இருந்து 5 வீடு தள்ளி வசிக்கிறார். எதிரியும் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. யார், யாரை அடித்தார்கள், யாருக்கு என்ன காயம் ஏற்பட்டது என்று எனக்கு எதும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக

போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. எங்கள் ஊரைச் சேர்ந்த ஜீவா என்பவருக்கும், ஆஜர் எதிரி ஜோதி என்பவருக்கும் பொது வழி சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றும், 16.12.2013–ம் தேதி மதியம் 12.30 மணிக்கு ஜோதி என்பவர் முள்விறகுகளை ஜீவா வீட்டின் ஓரம் போட்டதாகவும், அதனை ஜீவா கேட்டதற்கு எதிரி ஜீவாவை பார்த்து அசிங்கமாக திட்டி, கையில் வைத்திருந்த கொடுவாள் கத்தியால் ஜீவாவை ஒழிந்து போடி என சொல்லி ஓங்கி வெட்டியதாகவும், அப்போது ஜீவா வலது கையால் தடுத்தபோது, ஜீவாவிற்கு வலது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும், மறுபடியும் எதிரி ஒழிந்துபோடி என வெட்டவந்தபோது, இடது கையில் தடுத்தபோது இடது கையில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜோதி ஜீவாவை மாறி மாறி வலது முழுங்கை, இடது மார்பில் வெட்டியதால் ஜீவாவிற்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜீவா கூச்சல் போட்டு தெருவில் ஓடிவந்து விழுந்துவிட்டார் என்றும், அந்த சம்பவத்தை சத்தம் கேட்டு நான், அரிகிருஷ்ணன், சரவணன், முத்தம்மாள் ஓடிவந்து ரோட்டில் பார்த்தோம் என்றும், பின்னர் காயம்பட்ட ஜீவாவை டாட்டா ஏசி வண்டியை வரவழைத்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தாகவும், சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தபோது, சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று வாக்குமூலம் அளித்துவிட்டு, எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி அரசு தரப்புக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** : இல்லை.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.03 18:47:09 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No.10/2021** |
| Deposition of witness for | Prosecution **LW - 7 / PW - 7**<br>Defence<br>Court |

Name : **திரு. தனகோட்டி**

Father's Name : **திரு. வெங்கடேசன்**

Village : **கீழ்நேத்தப்பாக்கம்**

Taluk : **செய்யாறு**

Calling : **விவசாயம்**

Age : 51

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd Day of November 2025.

**(எதிரி ஆஜர். )**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

நான் கீழ்நேத்தப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஜீவா என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும், எங்கள் ஊரை சேர்ந்தவர். கடந்த 2013ம் வருடம் காலை 10.30 மணிக்கு நான் என்னுடைய வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி ஜோதி கத்தியால் ஜீவாவை கையில் வெட்டினார். பின்னர் ஜீவாவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சம்பவம்நடந்த மறுநாள் தூசி காவல் நிலைய போலிசார்

சம்பவ இடம் வந்து வரைபடம் வரைந்து விசாரித்தார்கள், அப்போது நானும், ஏழுமலை என்பவரும் அதில் சாட்சி கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம்என்னுடையது தான். **அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும்**. இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

அ.சா.1 ஜீவா எனக்கு உறவினர் இல்லை, எனக்கு பழக்கமானவர். நான் கையெழுத்து போட்ட பேப்பரில தான் ஏழுமலையும் கையெழுத்து போட்டார். அந்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. போலிசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன். எழுதியிருந்த பேப்பரில் கையெழுத்து போட்டீர்களா, எழுதாத பேப்பரில் கையெழுத்து போட்டீர்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் சென்றீர்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்தில் கையெழுத்து இடவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.03 18:47:19 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No.10/2021** |
| Deposition of witness for | Prosecution **LW - 8 / PW - 8**<br>Defence<br>Court |

Name : **திரு. சங்கர்**

Father's Name : திரு. நாகப்பன்

Village : சோழவரம்

Taluk : வெம்பாக்கம்

Calling : கிராம நிர்வாக அலுவலர்

Age : 43

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd Day of November 2025.

**(எதிரி ஆஜர். )**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

நான் சோழவரம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் தற்போது புதுப்பாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 2013ம் வருடம் கீழ்நேத்தப்பாக்கம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வந்தேன். கடந்த 12.12.2013ம் வருடம் மதியம் 12.00 மணிக்கு நான் கீழ்நேத்தப்பாக்கம் செல்வதற்காக ஆக்கூர் கூட்ரோட்டில் பேருந்திற்காக நின்று கொண்டு இருந்தேன். அதற்கு முன்பாக கீழ்நேத்தப்பாக்கத்தை சேர்ந்த ஜீவா என்பவரின் கையை ஜோதி

என்பவர் வெட்டிவிட்டதாக கேள்விபட்டேன். அந்த சமயத்தில் தூசி காவல் நிலையத்தினர் ஆக்கூர் கூட்ரோட்டிடம் வந்தனர், அந்த இடத்தில் இருந்த ஆஜர் எதிரி ஜோதியை போலிசார் பிடித்தனர். அப்போது போலிசார் எதிரி ஜோதியிடம் விசாரித்தார்கள். அப்போது ஆஜர்எதிரி ஜோதி, ஜீவாவை கத்தியால் கையில் வெட்டியதாக வாக்குமூலம் கொடுத்தார். அந்த கத்தியை போலிசார் கேட்டார்கள், அதற்கு ஜோதி வீட்டில் வைத்திருக்கிறேன் என்று சொல்லி வீட்டிற்கு அழைத்துசென்று அவர் வீட்டிற்கு பின்புறம்வைத்திருந்த கத்தியை ஆஜர் செய்தார். அதன் அடிப்படையில் போலிசார் கத்தியை கைப்பற்றினார்கள். எதிரி சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள், என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகும். கைப்பற்றுதல் மகசர் .சா.ஆ.5 ஆகும்.** தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தியை தான் ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

யார் அழைத்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்றீர்கள் என்றால் போலிசார் அழைத்தன் பேரில் சென்றேன். எதிரியிடம் வாக்குமூலம் பெறும்போது எத்தனை நபர்கள் அங்கிருந்தார்கள் என்றால் நிறைய பேர் அங்கிருந்தார்கள். கத்தியை எந்த இடத்தில் இருந்து எடுத்துக்கொடுத்தார் என்றால் வீட்டின் பின்பக்கம் இருந்து எடுத்து கொடுத்தார். அந்த கத்தியினை முதல் முதலில் நீதிமன்றத்தில்தான் பார்த்தீர்கள் என்றால் இல்லை. காவல் ஆய்வாளரின் பெயர் ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த மறுநாள் எதிரியிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். எதிரியிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும்,

மகசரில் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தினை காவல் நிலையத்தில் வைத்து எழுதினார்கள் என்றால் சரிதான். மகசர் போலிசாரால் காவல் நிலையத்தில் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு புறம்பாக சாட்யம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> – இல்லை

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.03 18:47:27 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No.10/2021** |
| Deposition of witness for | Prosecution **LW - 9 / PW - 9**<br>Defence<br>Court |

Name : **திரு. மணி**

Father's Name : திரு. கன்னியப்பன்

Village : கீழ்நேத்தப்பாக்கம்

Taluk : வெம்பாக்கம்

Calling : கிராம உதவியார் (ஓய்வு)

Age : 63

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd Day of November 2025.

**(எதிரி ஆஜர். )**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

நான் கீழ்நேத்தப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் கடந்த 2023ம் வருடம் கீழ்நேத்தப்பாக்கம் கிராம உதவியாளராக பணிசெய்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 2013 வருடம் கீழ்நேத்தப்பாக்கம் கிராம உதவியாளராக பணிசெய்து வந்தேன். கடந்த 12.12.2013ம் வருடம் மதியம் 2.00 மணிக்கு நான் செய்யாறில் இருந்து வீட்டிற்கு செல்லும்போது ஆக்கூர் கூட்ரோட்டில் ஆஜர் எதிரி ஜோதியை ஜீவா என்பவரை கத்தியால் வெட்டி வழக்கிற்காக தூசி காவல் நிலைய போலிசார் ஆக்கூர் கூட்ரோட்டு

அருகே பிடித்தார்கள். பின்னர் அவர் எதனால் வெட்டினார் என்பதனையும் எந்த இடத்தில் வெட்டினார் என்பதனையும் போலிசாரிடம் சொன்னார். பின்னர் ஜோதி கத்தியை அவர் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தார். அதை போலிசார் கைப்பற்றினார்கள். மேற்படி விவரத்தை போலிசார் பதிவு செய்து கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.7 ஆகும்.** தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தியை தான் ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் செய்யாறில் இருந்து வீட்டிற்கு செல்லும்போது போலிசார் அழைத்தார்கள். என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் வந்தார். என்ன கத்தியை ஆஜர் படுத்தனார் என்றால் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தியை தான் ஆஜர் செய்தார். எந்த இடத்தில் கத்தியை கைப்பற்றினார்கள் என்றால் எதிரி வீட்டினில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். நான் எதிரியின் வீட்டிற்குள் செல்லவில்லை. எதிரியிடம் போலிசார் வாக்குமூலம் வாங்கும் போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். போலிசார் கைப்பற்றி கத்தியில் ரத்தக்கரை இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எவ்வளவு தூரத்தில் கத்தியை பார்த்தேன் என்றால் கொஞ்ச தூரத்தில் இருந்து பார்த்தேன். கத்தியை சம்பவ இடத்திலும் பார்த்தேன், நீதிமன்றத்திலும் பார்த்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக காவல்

நிலையம் சென்றீர்களா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வாங்கினார்கள் என்றால் சரிதான். எதிரி என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எதிரியிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும், மகசரில் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. மகசர் போலிசாரால் காவல் நிலையத்தில் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு புறம்பாக சாட்யம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.03 18:47:34 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**